மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
EA No. 12/2013 in EP No. 9/2012.

பெயர் : செல்வராஜ்
சாட்சி – எ.ம.சா–1 நாள்: 20.11.2025

---

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. கிரைய ஒப்பந்த ஆவணத்தில் 2 வது அயிட்ட சொத்தாக சொல்லப்பட்டுள்ள வீடானது எந்த மூல ஆவணத்தின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எழுதிக் கொடுத்ததை நான் வாங்கினேன். தாவா சொத்து புல எண்ணில் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் அந்த சொத்து பிரிக்கப்படாமல் அப்படியே உள்ளது. பிரிக்காத சொத்தை தான் நான் ஒப்பந்தம் செய்து கொண்டேனா என்றால் ஒப்பந்தம் செய்து கொடுத்தார் நான் வாங்கினேன். அது பற்றி எனக்கு தெரியாது.

2. என்ன நீல அகலத்திற்கு எனக்கு ஒப்பந்தம் செய்து கொடுக்கப்பட்டது என்ற விவரம் தற்போது வரை எனக்கு தெரியாது என்றால் சரிதான். தற்போது வரை நான் கிரைய ஒப்பந்தம் செய்து கொண்ட சொத்தினை பொறுத்து மூல ஆவணங்களை சரி பார்த்ததில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் செய்து கொண்ட போது விஜயாவிடம் நான் முன்பணமாக ரூபாய் 75 ஆயிரம் கொடுத்தேன்.

3. நான் தாக்கல் செய்த வழக்கில் விஜயா முன்னிலையானார் என்றால் சரிதான். விஜயா நீதிமன்றத்தில் முன்னிலையாகி பதில் மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் விஜயா தாக்கல் செய்த பதில் மனுவின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். ( **அசல் வழக்கு எண் 1100 / 2008 வழக்கில் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள பதில் மனுவின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகின்றது**.) ம.சா.ஆ.21 ஆவணத்தில் முதலில் ரூபாய் 75 ஆயிரம் கொடுத்ததாகவோ, பின்னர் ரூபாய் 15,000 கொடுத்ததாகவோ எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். விஜயா பல்லடத்தில் இருந்து கோயம்புத்தூர் நீதிமன்றம் வந்து தான் பணம் வாங்கியதாக ஒப்புக்கொண்டு பதில் மனு தாக்கல் செய்திருக்கும் பட்சத்தில், அவரே பல்லடம் சார் பதிவாளர் அலுவலகம் வந்து

எனது பெயருக்கு கிரையம் செய்து கொடுத்திருக்க முடியும் என்றால் அவர்தான் கோயம்புத்தூர் வந்தார்.

4. சொத்தில் விஜயாவிற்கு எந்த உரிமையும் இல்லை என்பதால்தான் அவரால் சார்பதிவாளர் அலுவலகம் வந்து பத்திரப்பதிவு செய்து கொடுக்க முடியாது என்பதற்காக, மோசடியாக விஜயாவை பயன்படுத்தி ஒரு வழக்கினை தாக்கல் செய்து இருவரும் சேர்ந்து மோசடியாக உத்தரவு பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. விஜயாவிற்கு வாரிசு அடிப்படையில் உரிமை உள்ளது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அசல் வழக்கு எண் 1100/2008 வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். ( **அசல் வழக்கு எண் 1100 / 2008 வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்படுகின்றது**.)

5. நான் அசல் வழக்குரை தாக்கல் செய்தபோது, கோயம்புத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு ஆள்வரை அதிகார வரம்பு இல்லை என்று திருப்பப்பட்டுள்ளது என்றால் ஆங்கிலத்தில் உள்ளதால் எனக்கு அது பற்றி தெரியாது. வழக்குரை திருப்பப்பட்ட பின்பு மீண்டும் நான் தாக்கல் செய்த போது, ஒப்பந்தமானது கோயம்புத்தூரில் செய்து கொள்ளப் பட்டதால் நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு உள்ளது என்று தெரிவித்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

6. தாவா சொத்தானது பணப்பாளையம் – பெத்தாம் பாளையம் கிழமேல் சாலையில் தென்புறம் அமைந்துள்ளது என்றால் சரிதான். தாவா வீட்டிற்கு மேல் புறத்தில் தென்வடலாக கான்கிரீட் ரோடு தற்போது போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கான்கிரீட் சாலையின் பெயர் ரங்கசாமி நாயுடு சந்து என்றால் சரிதான். கிழமேல் ரோட்டில் தென்புறத்தில் முதல் வீட்டில் ராஜம்மாள் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு தனியாக நுழைவுக் கதவு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு தனியாக மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான்.

7. ராஜம்மாள் வீட்டின் தென்புறம் மேற்கு பார்த்த எனக்கு பாத்தியப்பட்ட மற்றொரு வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீடு எனது அம்மா எழுதிக் கொடுத்த வீடு. அந்த வீட்டினை கடந்த 21.09.2016 தேதியில் நான் எனது சகோதரிக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு தனியாக மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். எனது சகோதரிக்கு

செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ள வீட்டிற்கு தொட்ட தென்புறம் சின்னசாமியின் வீடு உள்ளது என்றால் சரியல்ல. அந்த வீடு யாருடையது என்றால் விஜயாவின் வீடு ஆகும். அந்த வீட்டில் தற்போது யார் குடியிருக்கிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வீட்டில் தான் விஜயா குடி இருந்தார் என்று காண்பிப்பதற்கு ஏதேனும் ஆவணம் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

8. அந்த வீட்டில் யார் வசித்து வருகிறார்கள் என்று எனக்கு நன்கு தெரியும் என்றும், 2010 ஆம் ஆண்டு மனுதாரரின் தந்தை சின்னசாமி சொத்தினை வாங்கியதில் இருந்து அவரும், அவருடைய மனைவியும் வசித்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு நன்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது சகோதரி பாப்பம்மாளுக்கு எழுதிக் கொடுத்த வீட்டின் தென் புறத்தையும், மனுதாரர் தமிழரசியின் வீட்டினை பிரிப்பதற்கும் காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரியல்ல.

9. நான் கடைசியாக அந்த வீட்டினை எப்போது சென்று பார்த்தேன் என்றால் ஒரு மாதத்திற்கு முன்பாக கூட சென்று பார்த்தேன். நான் சென்று பார்த்த போது காம்பவுண்ட் சுவர் இருந்ததா என்றால் நான் அதனை பார்க்கவில்லை. மனுதாரர் தமிழரசி என்னை உள்ளே வரக்கூடாது என்று சொன்னதால் நான் போகவில்லை. 1990 ஆம் ஆண்டு நான் தாக்கல் செய்த பாகபாத்திய விடுதலை பத்திரம் நடந்ததாக குறிப்பிட்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் எந்த சொத்து விவரமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

10. 25.09.1990 தேதியில் பாகசாசனம் நடந்ததாக நான் ஆவணத்தின் நகலினை தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்திலும், வீட்டு சொத்தைப் பொறுத்து சொத்து விவரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கடந்த 10.01.2011 தேதியில் ஆண்டு ஆறுமுகம் என்ற வழக்கறிஞர் மூலமாக நகராட்சி செயல் அலுவலருக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் ராஜம்மாள் என்பவர் தனது மகனான பி.சின்னசாமி என்பவருக்கு எனக்கு நீதிமன்றத்தால் எழுதிக் கொடுக்கப்பட்ட சொத்தின் ஒரு பகுதியை கடந்த 01.11.2010 அன்று ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பதிவு செய்துள்ளதாக அறிந்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் 10.01.2011 தேதியில் நான் அனுப்பிய அறிவிப்பின் நகல் என்றால் சரிதான்.

**(10.01.2011 தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பின் நகல் ம.சா.ஆ.23 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.)**

**மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.11.20 18:05:34 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.